2013 மே 7]

மக்கள் கோரிக்கை வைப்பதற்கு முன்பே, தேவையறிந்து திட்டங்களைக் கொடுப்பவர்தான் நமது முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே, 2012 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலேயே, புதுக்கோட்டை வருவாய்க் கோட்டம் மக்களுடைய நிருவாக வசதிக்காக பிரிக்கப்பட்டு, இலுப்பூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய்க் கோட்டம் உருவாக்கப்படும் என தாயுள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்துள்ளதன் அடிப்படையிலே, தற்போது பூர்வாங்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மிக விரைவில் இலுப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய்க் கோட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.

திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றில் இடம் பெறுபவர்கள் மத்தியில் வரலாறாகவே வாழும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இந்த வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் புதுக்கோட்டை மக்களின் சார்பாக பணிவுடன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 424, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

424—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***17703—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 மே 7

(அ) பல்லடம் தொகுதி, பனிக்கம்பட்டி ஊராட்சி, சின்னிகவுண்டம்பாளையம் மற்றும் அய்யம்பாளையம் ஊராட்சி, அய்யம்பாளையம் ஆகிய பகுதிகளிலுள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சென்னை தமிழனுக்கு மாத்திரமல்ல; ஜெனிவா தமிழனுக்கும் இருக்கிற ஒரே நம்பிக்கை புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய அம்மா அவர்களுடைய ஆட்சியில் தமிழக கல்வித் துறை மகத்தான இடத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கிறது. இத்துறை ஏறக்குறைய 57 ஆயிரத்து 573 பள்ளிகள், 5 இலட்சத்து 83 ஆயிரத்து 244 ஆசிரியர்கள், ஒரு கோடியே 35 இலட்சத்து 21 ஆயிரத்து 4 மாணவ, மாணவிகளைக் கொண்ட ஒரு விரிந்த, பரந்த அமைப்பாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்ததில், இந்த ஆண்டு தரம் உயர்த்துவதற்கு வாய்ப்பில்லை. அடுத்த ஆண்டு "ஆகட்டும் பார்க்கலாம்" என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து."

ஒரு பிறப்பில் ஒருவன் கற்ற கல்வியானது, அவனது ஏழு பிறப்பிலும் தொடர்ந்து வந்து உதவும் என்பது வள்ளுவரின் வாக்கு. கல்வியில் ஏழை, பணக்காரன் என்ற பேதம் பாராமல், கல்விப் புரட்சி செய்து, மற்ற மாநிலங்களும் தமிழகத்தைப் பின்பற்றும்

2013 மே 7]

நிலையை ஏற்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுக்காக இரவு, பகல் பாராமல், கண் துயிலாமல் உழைத்துக்கொண்டிருக்கும் ஏழைகளின் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

பல்லடம் தொகுதி, பனிக்கம்பட்டி ஊராட்சி, சின்னிகவுண்டம்பாளையத்திலும், அய்யம்பாளையம் ஊராட்சி, அய்யம்பாளையத்திலும் உள்ள நடுநிலைப் பள்ளிகளின் நிலைமையை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அடுத்த கல்வி ஆண்டிலாவது இந்த இரு பள்ளிகளையும், உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுகிறேன். பல்லடம் தொகுதியில் அரசு விதிகளுக்குட்பட்டு நடுநிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்திட கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவற்றை வரும் கல்வியாண்டில் தரமுயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற பல்லடம் ஒன்றியத்தில், கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுடைய விவரங்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இரண்டு ஆண்டுகளில் மாத்திரம் பல்லடம் ஒன்றியத்தில், அருள்புரம், காரணாம்பேட்டை, பூமலூர், கோடாங்கிபாளையம், 63 வேடம்பாளையம், நடுவேடம்பாளையம், அறிவொளி நகர் ஆகிய 7 இடங்களிலுள்ள பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற இரண்டு பள்ளிகளை இந்த ஆண்டு தரம் உயர்த்துவதற்கு வாய்ப்பில்லை. அடுத்த ஆண்டு அதற்குரிய விதிமுறைகளுக்கெல்லாம் அவை உட்பட்டிருந்தால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்யப்படும் என்கிற

தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், பல்லடம் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் தொகுதி, பாவாளி, பேராளி, இனாம்ரெட்டியார்பட்டி, பட்டாம்புதூர், ஆனைக்குட்டம், புதுக்கோட்டை ஆகிய ஆறு இடங்களிலுள்ள நடுநிலைப் பள்ளிகளைத் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த ராஷ்ட்ரிய மத்தியமிக் சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ் (RMSA) 2011 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால், இன்னும் எந்தப் பணமும் ரிலீஸ் செய்யப்படவில்லை. மத்திய அரசாங்கத்தின் இணையதளத்தில் இந்தப் பணம் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுவிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பள்ளிகள் எப்பொழுது தரம் உயர்த்தப்படும்? ஏனென்றால், இந்தப் பணம் 2009–2010 ஆம் ஆண்டுக்குப் பிறகு வரவேயில்லை என்று சொல்கிறார்கள். இந்த 6 பள்ளிகளும் தரம் உயர்த்தப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், துணைக் கேள்விக்கும் தொடர்பில்லை. அதாவது பரவாயில்லை. ஆனால் தொகுதிக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தொடர்பில்லை என்பதுதான்

2013 மே 7]

வியப்பான ஒரு செய்தி. இருந்தாலும்கூட எனது கருத்தைச் சொல்லிக்கொள்ள நான் பணிவுடன் விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்தின் RMSA திட்டத்தின்கீழ், மத்திய அரசாங்கம் 50 சதவிகித பங்கும், மாநில அரசு 50 சதவிகித பங்கும் செலுத்தி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திக் கொண்டு வருகின்றன. ஆனால் இந்தத் திட்டம் மத்திய அரசால் முழுமையாக கைவிடப்பட்டுவிட்டதால், 100 சதவிகிதப் பங்குகளை மாநில அரசே ஏற்றுக்கொண்டு, நம்முடைய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற நல்ல செய்தியைச் சொல்லி, அதற்குரிய தீர்வு எட்டப்படும் என்கிற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு சலுகைத் தொகுப்பு குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி எண் 110—ன்கீழ் 2 அறிக்கைகளை அளிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும், நிலைத்த வேலைவாய்ப்புகளை அளிப்பதிலும், தொழில்முனைவோர் மேம்பாடு அடைவதற்கும், நாற்றங்காலாக விளங்குவது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை என்று சொன்னால், அது மிகையாகாது.